## ஜீலை மாத கருத்தமைதி

## பேரன்புக்கு அடிப்படை ஒழுங்கு நெறியும், நமது துறவற வாழ்வு நெறிகளும்

**பேரன்பு:**

- ☯ இவ்வளவுதான் என்ற இலக்கு கூற முடியாத உணர்வு
- ☯ போதும் என்ற நிறைவு ஒருபோதும் இதற்கு கிடையாது
- ☯ இருக்கும் இடத்தில் வேர் பிடித்து, சுற்றி இருக்கும் அனைவரையும் பற்றி இழுக்கக்கூடிய உணர்வு.
- ☯ இருப்பவர், இல்லாதவர் என்ற பாகுபாடு பார்க்காது, இயல்பால் தோன்றும் உணர்வு.
- ☯ இப்படித்தான் செய்யப்படவேண்டும், இந்த முறைதான் பின்பற்றப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடற்றது.
- ☯ நிறம் பார்த்து குலம் பார்த்து தோன்றாது
- ☯ உருவம் பார்த்து, உயரம் பார்த்து வராது
- ☯ அர்த்தம் இதுதான், அளவு இவ்வளவுதான், எடுத்துக்காட்டு இதுதான் என்று இயம்ப முடியாத உணர்வு.
- ☯ அன்பில் தவறுகள் உண்டு, தண்டனைகள் இல்லை
- ☯ சறுக்கல்கள் உண்டு, சங்கடங்கள் இல்லை
- ☯ தொய்வுகள் உண்டு, தோல்விகள் இல்லை
- ☯ இடர்கள் உண்டு, இறுமாப்புகள் இல்லை
- ☯ அன்புக்கு வரையறைகள் இல்லை, வரைமுறைகளும் இல்லை
- ☯ இந்த பேரன்பை திகட்டத் திகட்ட நாம் அனுபவிக்க வேண்டுமெனில் அணுக வேண்டியது ஆண்டவனை மட்டுமே. ஏனெனில் நிபந்தனை இல்லாமல், நிர்ப்பந்தம் இல்லாமல், கட்டுப் பாடுகள் இல்லாமல், எல்லைகள் இல்லாமல் அள்ளித் தருவதில் வள்ளல் நம் ஆண்டவரே! அவரின் பேரன்பை உணரத் தொடங்குவோம்.

பாடல்: **அன்பே அன்பே!**

**பேரன்பிலும், துறவற வாழ்விலும் ஒழுங்கு நெறிகள்:**

- ✧ பேரன்பு செய்வதற்கு ஒழுங்கு தேவையில்லை. ஆனால் யாரெல்லாம் ஒழுங்கமைவை நேசிக்கிறார்களோ அவர்களெல்லாம் பேரன்பை பெருக்குகிறார்கள். இந்த நேசத்துக்குரியவர்கள் சில அளவீடுகளை நிர்ணயிக்கிறார்கள்.

**கொடுத்தல்:**

முன் கையையும் நீட்ட வேண்டும், முழங்கையையும் நீட்டிக்கொடுக்க வேண்டும். கிள்ளி அல்ல, அள்ளிக் கொடுக்க வேண்டும். திரும்பக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில்லாமல் கொடுக்க வேண்டும். யாராயிருந்தால் என்ன, எதுவாக இருந்தால் என்ன, இருக்கும் வரை கைரேகை தேயும் வரை கொடுக்க வேண்டும் என்ற பேராசை, பேரன்புக்கு உண்டு. கொடுக்க, கொடுக்க விளையும், எடுக்க எடுக்க ஊறும் என்ற கொள்கையைக் கொண்டது அன்பு. தனக்கு வேண்டும் என்று கருதாமல், தேவை உள்ளவர்களுக்கு கிடைக்கட்டும் என்ற நல்ல மனங்கள் உள்ளவரை மழை குறையாது இம்மண்ணில். ஆனால், பல வேளைகளில் இந்தப் பேரன்பு ஏமாளியாய் எண்ணப்படுகிறது. தன்னை தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்று தெரிந்தும் தானே ஏமாறும் குணம் இந்தப் பேரன்புக்கு உண்டு.

நமது துறவற வாழ்விலும் கொடுத்தல் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது. இறைவனுக்கு முதலிடம் கொடுப்பது, முன்னுரிமை கொடுப்பது, அனுதினத்தையும் அவரது விருப்பத்திற்கு விட்டுக்கொடுப்பது. இறைவன் கொடுத்த நேரத்தை, இயற்கை தந்த திறமைகளை அடுத்தவர்க்கு, பணி செய்ய பயன்படுத்துவது. இறைவனின் பேரன்பே நம்மை வாழவைக்கிறது. நம் துறவற வாழ்வு நம்மை வளர வைக்கிறது.

**பாடல்: கொடுப்பதன் இன்பம்....**

**நம்பிக்கை:**

நம்பிக்கை கலங்கரை தென்படாத இடங்களில் கூட பேரன்பு தன்னை நங்கூரமாக்குகின்றது. எந்த அளவிற்கு ஒருவர் நம்பகமான பேரன்பை அடுத்தவர்க்கு கொடுக்க விழைகிறாரோ, அந்த அளவிற்கு அவரது அன்புக்குரியவர்கள் பதிலன்பு காட்ட விழைகிறார்கள். இதில் ஒருவர் மட்டும் விதிவிலக்கு, அது கடவுள். நாம் அவருக்கு பிரமாணிக்கமாய் இருக்கத் தவறிய நேரங்களை கணக்கிட்டு அவர் நம்மைத் தண்டிக்க நினைத்தால் நமது நிலை என்ன? ஆனால் அவர் நமக்கு பிரமாணிக்கமாய் இருக்கிறார். கொடுத்த வாக்குத்தத்தத்தையும், தந்த திரவியங்களையும், விடுத்த அழைப்பையும் ஒருபோதும் நம்மை விட்டு எடுப்பதில்லை.

இறைவன் நம்மைத் தாங்குவார், வழிநடத்துவார், எல்லாம் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கைதான் நம்மை இந்த வாழ்வில் இன்னும் நிலைத்திருக்க வைத்திருக்கிறது. இறைவனின் பேரன்பின் மீது நாம் கொண்ட நம்பிக்கை, நம்மீது நம் சபை கொண்ட நம்பிக்கை இன்னும் நம்மை வாழ வைக்கும். வளர வைக்கும்.

**பாடல் : உன்னை நம்பி வாழும் போது.......**

**விட்டுக்கொடுத்தல்:**

பேரன்பின் வேர் விட்டுக்கொடுத்தலில் இருக்கிறது. நாம் நேரத்தை விட்டுக் கொடுக்கும் போது, அன்பு அடுத்த கட்டத்திற்குச் செல்கிறது. நம் திறமைகளை விட்டுக்கொடுக்கும் போது அன்பு அறியப்படுகிறது. நமது ஈகோவை விட்டுக் கொடுக்கும் போது அன்பு, அன்பு செய்யப்படுகிறது. நமது செல்வங்களை விட்டுக்கொடுக்கும் போது அன்பு, அன்பால் அளவிடப்படுகிறது. நமது பிடிவாதத்தை விட்டுக் கொடுக்கும் போது, அன்பு அணைகடந்து பெருகுகிறது.

நம் சபையின் ஒழுங்குகளும், நம்மை, நமது சுயநலத்தை, இறுமாப்பை, மமதையை, பெருமையை, நான் மட்டும் ஜெயிக்க வேண்டும், எல்லாம் எனக்கு மட்டும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிட நம்மைத் தயாரிக்கின்றது. எல்லாவற்றையும் இழந்து விட எண்ணும் போது, எல்லாம் இன்பமயமாகிறது.

**பாடல் : நீயே நிரந்தரம்…...**

**பணிவு:**

பணிவுள்ள ஒருவரிடம் பேரன்பு பன்மடங்காகிறது. பணியாத ஒருவரிடம் பேரன்பு பாதியளவாகிறது. நான் ஒன்றுமில்லை என்ற வெற்றுப் பாத்திரத்திற்குள் மட்டுமே பேரன்பு என்ற வெகுமதியை நிறைய நாம் வைக்க முடியும். வெறுமை தான், ஒன்றுமில்லாமைதான் நம்மை முழுமையாக்குகிறது. எனக்குத் தெரிந்தது சிறிதளவே, நான் கற்றிருப்பது கையளவே என்று பணியும் போது, பாராட்டு மாலைகள் நம்மை தலைநிமிர வைக்கின்றன. எங்கு பணிவு உள்ளதோ, அங்கு பேரன்பின் பிள்ளைகள் தானாக குடியேற வந்து விடுகிறார்கள்.

நமது வாழ்வில் கீழ்ப்படிதல் பல உயர்வையும், உவப்பையும் தருகின்றன. பணிவு பயத்தில் வராமல், பண்பால் வர வேண்டும். நமது பணிவு பாசாங்காய் இல்லாமல் பரிசுத்தமாய் இருக்க வேண்டும்.

**பாடல் : ஒன்றுமில்லாமலே நின்ற என்னை…..**

**மன்னிப்பாயா இறைவா:**

- அன்பு ஒரு சிலருக்கு மட்டுமே என்று பல நேரங்களில் சுரங்கிப் போனோம். மன்னிப்பாயா இறைவா…..
- பல நேரங்களில் அன்பு என்ற சொல்லால் ஏமாற்றி இருக்கிறோம்..
- பல நேரங்களில் அன்பை அள்ளி அல்ல, கிள்ளி கூட கொடுக்க மறந்திருக்கிறோம்…
- பல நேரங்களில் அன்பு என்ற பெயரால் அடுத்தவரை பயமுறுத்தி இருக்கிறோம்….

- பல நேரங்களில் அன்பு செலுத்த வேண்டிய இடத்தில் அதிகாரத்தை காட்டியிருக்கிறோம்..
- பேரன்பு காட்டாமல், குறுகிய மனதினராய் வாழ்ந்திருக்கிறோம்..
- பேரன்பு பெருவட்டத்தை, குறுவட்டம், சிறுவட்டம் ஆக்கி இருக்கிறோம்..
- அன்பே செய்யத் தெரியாத அவல நிலையில் வாழ்ந்திருக்கிறோம்…
- எங்களின் அழைத்தல் அன்பினால் தான் என்பதை மறந்து, எல்லாம் எங்களின் திறமையால்தான் நாங்கள் பெருவாழ்வு வாழ்கிறோம் என்று எண்ணி இருக்கிறோம்..
- இந்தப் பிரபஞ்சமே எங்களை அன்பு செய்கிறது, இந்தப் பிரபஞ்சத்தின் சிறு துகளே நான் என உணராமல் இருந்திருக்கிறோம்..
- பிரபஞ்சத்தின் நுட்ப இயக்கம், எனது ஒவ்வொரு செல்லிலும் இடம் பெறுகிறது என்று உணராமல், நான் பிரபஞ்சத்தின் அசல் என்பது புரியாமல் வாழ்கிறோம்..
- என்னைப் போல் அடுத்தவர் வாழ்வதற்கு எல்லா உரிமையும் இருக்கிறது என்பதை உணராமல் நான் வாழ பிறரைக் கெடுத்திருக்கிறேன்..
- எல்லாரும் இந்த சபையில் சரிசமமாக வாழ அழைக்கப்பட்டவர்கள் என்பதை உணராமல் ஒரு சிலரை மட்டுமே சார்ந்து வாழ்ந்திருக்கிறேன்…
- எல்லாரும் நல்லவர்களே, எல்லாரும் நம்மவர்களே என்பதை அறிந்தும், உணராமல் இருந்திருக்கிறோம்…